ப்பாணம்
நூலகம்.

## ★ ஆனையிறவு, பூநகரி முகாம்களை பாதுகாப்பது தொடர்பாக

விலை ரூபா 5. 00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 03 இதழ் 102
யாழ்ப்பாணம் புதன்கிழமை 17 - 5 - 1995

## ஜனாதிபதி ஆராய்வு

(கொழும்பு)

கடந்த வார இறுதியில் ஜனாதிபதி சந்திரிகா. ஆனையிறவு பூநகரி முகாம்களை காப்பது தொடர்பாக கூட்டமொன்றை நடத்தியுள்ளார்

நீண்டநேரம் நடைபெற்ற இக்கூட்டத்தில் பூநகரி, ஆனையிறவு, முல்லைத்தீவு பிராந்திய தளபதி மேஜர் ஜெனரல் கெமுனு குலதுங்கா இராணுவ தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா உட்பட பல உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

(5ம் பக்கம் பார்க்க)

## அதிவேக விமான மூலம் புலிகள்மீது தாககு

(கொழும்பு)

வடக்கிலுள்ள விடுதலைப் புலிகளின் முகாம்கள் மீது அதிவேக விமானங்கள் மூலம் தாக்குதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக பிரதிப்பாதுகாப்பு தரப்பினை மேற்கொள்காட்டும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த தொவிசதுள்ளார். என்று

(5ம் பக்கம் பார்க்க)

## அரசு வடபகுதியில் மேற்கொள்ளவிருந்த

# புனர்நிர்மாண வேலைகள் ரத்து

# விசேஷ செயலணியும் கலைப்பு!

## ஒதுக்கப்பட்ட நிதி பாதுகாப்பு செலவுக்கு வழங்கப்பட்டது

(கொழும்பு)

வடக்கு கிழக்குப்பகுதிகளில் யுத்தம் ஆரம்பமானதைத் தொடர்ந்து வடபகுதி புனர் நிர்மாண வேலைகளை அரசாங்கம் இரத்துச் செய்துள்ளதுடன் விசேஷ செயலணிக்குழுவும் கலைக்கப்பட்டு விட்டதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது'

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதான பேச்சுவார்த்தைகள் ஆரம்பமானபொழுது வடபகுதி புனர்நிர்மாண வேலைகளுக்கென அரசாங்கம் கோடிக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கீடு செய்தது.

[5-ம் பக்கம் பார்க்க]

## முப்படைகளின் நடவடிக்கை தளபதியாக செனவிரத்ன

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பகுதி முப்படைகளின் தளபதியாக நியமனம் பெற்ற மேஜர் ஜெனரல் ஏ. எம். யூ செனவிரத்னவை முப்படைகளின் தளபதியாக பாதுகாப்பு அமைச்சு நியமனம் செய்துள்ளது.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

## நீண்ட தொடர் யுத்தத்துக்கு இராணுவம் தயாராகி வருகின்றது

]கொழும்பு[

சிறிலங்கா படையினர் நீண்ட கடுமையான யுத்தம் ஒன்றுக்கு தம்மை தயார்படுத்தி வருவதாக கொழும்பு பத்திரிகைஒன்று தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் கடுமையான திடீர் தாக்குதல்களினால அதிர்ச்சிககுட்பட்டிருக்கும படையினர் நீண்ட பெரும் யுத்தம் ஒன்றுக்கு தயாராகிவருகின்றனர் என்று பாதுகாப்பு அதிகாரிகளும் ஆய்வாளர்களும் கருத்து வெளியிட்டுள்ளதாக அப்பத்திரிகை

(6-ம் பக்கம் பார்க்க)

## மட்டு. தாக்குதலில் சிப்பாய் ஒருவர் பலி

[மட்டுநகர்]

மட்டக்களப்பு க வலரணில் நின்ற இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவ சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் மாலை மட்டு. பூமாஞ்சோலை, இலுப்

[6ம் பக்கம் பார்க்க]

## ஆனையிறவில் புலிகள் தாக்குதல் 3 ராணுவம்பலி; ஆயுதம் மீட்பு

[யாழ்ப்பாணம்]

ஆனையிறவு உப்பளக் காவலரண் பகுதியில் விடுதலைப் புலிகள் நேற்று நடத்திய திடீர்த் தாக்குதலின்போது, மூன்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

நேற்றுக் காலை 6-55 மணியளவில இத்தாக்குதல் நடைபெற்றது. ஆனையிறவு உப்பளம் பகுதியிலுள்ள தொடர் காவலரணில் இருந்து 50 மீற்றர் முன்னுக்கு வந்த 10 இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலிலேயே, மேற்குறிப்பிட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஏனையோர் காயங்களுடன் தப்பி ஓடிவிட்டனர்.

இத்தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் சடலம் ஒன்றும், ஏ கே.எல், எம்.ஜி. துப்பாக்கி 1, ரி 56

(6-ம் பக்கம் பார்க்க)

## வட, கிழக்கு இணைப்புக்கு சர்வஜன வாக்கெடுப்பு

### ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடாத்தப்படவேண்டுமென்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் இந்தக்கோரிக்கையை விடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

எனினும் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் அரசியல் கட்சிகள் இந்தக் கோரிக்கையில் கையெழுத்திடுவதில்லையென தெரிவித்துள்ளன.

(இ ரி)

## இராணுவ பலத்தை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை இராணுவ பலத்தைமேலும்அதிகரிக்கமுக்கியமாகமாக சிறப்புப்படை வீரர்களுக்கு புதிய இராணுவத்திரை தேர்வு செய்யும் நடவடிக்கைகளில் உயர் இராணுவஅதிகாரிகள் நேற்று ஈடுபட்டதாக பாதுகாப்பு அமைச்சை மேற்கோள்காட்டி ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

## படை அதிகாரிகள் பலருக்கு விரைவில் ஓய்வு!

[கொழும்பு]

பாதுகாப்புப் படை அதிகாரிகளில் பலர், விரைவில் ஓய்வில் செல்லலாம் என்று 'ராவய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

உளவுப் பிரிவைச் சேர்ந்த சர்னி விஜேசூரிய, பொலிஸ் மா அதிபர் பிராங் டி சில்வா, இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா, லக்கி அல்கம ஆகியோரே ஓய்வு பெறும் வயதை அடைந்துள்ளார்கள் என்றும் 'ராவய' மேலும் தெரிவித்துள்ளது.

மேற்குறிப்பிட்டவர்களில் சில அதிகாரிகளுக்குச் சேவை நீடிப்பு வழங்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

[ம ரி

## வடக்கு'கிழக்கு போர் நிலைமை குறித்து

# நான்கு தமிழ் அரசியல் கட்சிகள் ஜனாதிபதியை சந்தித்து இன்று பேச்சு

(கொழும்பு

நான்கு தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிகள் இன்று புதன்கிழமை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளனர்.

வடக்கு, கிழக்கில் இப்போது எழுந்துள்ள நெருக்கடி நிலைகுறித்தும், தமது நிலைப்பாடு குறித்தும் இந்தப் பிரதிநிதிகள் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்துவர் என தெரிவிக்கப்பட்டது

[6-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

**Maths English 95**

O/L Distinction Credit பெறுபேறுடைய 3 மாதங்களில் ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும். (ஆண்டு 9, 10 உட்பட) ஆசிரியர் B. Sc. 85. சிவன்கோவிலடி, சிவன் கோவில் மேற்குவீதி, திருநெல்வேலி. (சி-1478)

## ரகு புகைப்படக் கருவி திருத்தகம்

சகலவிதமான ஸ்டில் அன்ட் மூவி கமராக்கள் எலக்ரோனிக் பிளாஷ்கன் பைனகுலர்ஸ் ரேஞ் விசேடமுறையில் திருத்தும் இடம். ரகு போட்டோ ரெக்னிக் 301, சந்தோசம் வீதி, [கஸ்தூரியார் வீதி] (மேல்மாடி) கன்னுதிட்டிச் சந்திக்கருகாமையில் யாழ்ப்பாணம். [சி- 1477]


## மா, சீனி விநியோகம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் "அ", "உ" பங்கீட்டு அட்டைக்கு தலா 5 கிலோ மாவை கிலோ 8 ரூபா 50 சதப்படி வழங்கி வருகின்றது. இதேவேளை குடும்ப அங்கத்தவர் தொகைக்கு ஏற்ப சீனியை கிலோ 31 ரூபா வீதம் சங்கக் கிளைகள் ஊடாக வழங்கி வருகின்றது. -72-சி

## திருடப்பட்ட சைக்கிள் மீட்பு

(நெல்லியடி)

புகார் ஒன்று தொடர்பாக ஒருவரை கோப்பாய் காவல் துறையினர் கைதுசெய்து விசாரணைசெய்த சமயம் அவரால் திருடப்பட்ட சைக்கிள் ஒன்றும் மீட்கப்பட்டது.

சாவகச்சேரி காவல் பணிமனை நிர்வாகத்திற்குட்பட்ட பகுதியிலேயே இச் சைக்கிள் திருட்டு இடம்பெற்றது. -160

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995–05–17**

புதன் இரவு

8-02 குயிலோசை- நிகழ்ச்சியில் "ஆனையை அடக்கிய அரியாத்தை" நாடகத்தின் இறுதிப் பகுதி
8 20 வாத்திய கானங்கள்
8-30 செய்திகள்
8-40 நாடகம் - சிவசக்தி எழுதிய "படிப்பினை"

**1995–05–18**

வியாழன் காலை

7-02 மாவீர வணக்கம்
7-15 விடுதலை கீதங்கள்
7-30 செய்திகள்
7.35 பத்திரிகைச் செய்திகள்
7-40 விடுதலைகீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995–05-17**

புதன் மாலை

5-01 சிந்தனைச் சிதறல்
5-02 எழுச்சிகீதம்
5-10 புதியவை
5-15 படப்பாடல்கள்
5-30 அறிவூற்று
6-00 சிந்தனைக்கு சிலவினாடிகள்
6-02 உங்கள் தெரிவு
6-15 விளையாட்டுச் செய்தி
6-20 உங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி
6-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

# மோசமான நாட்களை இனிமேல் அரசு எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு அரசியல் தீர்வைத் தள்ளிவைத்தமையானது ஒரு சாராரிடத்தில் ஆதரவையும் மறுபுறத்தில் எதிர்ப்பையும் பெற்றுள்ளது என 'சண்டே ரைம்ஸ்' இராணுவ ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; ஜனாதிபதியின் செயலை எதிர்ப்பவர்கள், சிறுபான்மை மக்களின் உரிமைகள் மதிக்கப்பட்டு அவர்களுக்கு அதிகாரப் பங்கீட்டை சரியானமுறையில் செய்யாது விடுவது ஒரு குறை எனக் கூறுகின்றனர். மறுபுறத்தில் ஒரு கெரில்லாப் போரை இராணுவரீதியில் வென்றதாக சரித்திரத்தில் இல்லை என்றும் கூறியுள்ளனர்.

திருமதி சந்திரிகாவின் செயலைப் பாராட்டுபவர்கள் குறிப்பாக இராணுவத் தலைவர்கள், புலிகளுக்கு ஒரு பாடம் புகட்ட இது தருணம் எனக்கூறியுள்ளனர். இச்செயல் சாதாரண தமிழ்ப் பொதுமக்களைக்கூடத் தீவிரவாதத்தில் நம்பிக்கை வைக்கச்செய்யும் செயலாகும்.

அதிகமான தமிழர்கள், தற்போதைய அரசு, தமிழ் மக்களின் பிரச்னைக்கு அரசியல் தீர்வைக்காணும் எனத் திடமாக நம்பியிருந்தனர் ஆனால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அறிக்கை இந்த நம்பிக்கையைப் பாழடித்து, பொதுசன ஐக்கிய முன்னணி அரசினால் பிரச்னையைத் தீர்க்க முடியாது என்ற எண்ணத்தை தோற்றுவித்துள்ளது,

கடந்த கால அரசியல் தலைவர்களாலும் இராணுவத் தலைவர்களாலும் எதிரியின் எண்ணகருத்தைப் புரிந்து கொள்ளமுடியாமல் போயிற்று. திரு. பிரேமதாசா இந்தியாவின் விஸ்தார வளர்ச்சியையோ, விடுதலைப் புலிகள் பற்றியோ, ஜே. வி. பி. பற்றியோ சரியாகக் கணிப்பிடத் தவறிவிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி விஜயதுங்கவும் புலிகளுக்கு எதிராக இராணுவத்தைச் செயற்படவைக்கத் தவறிவிட்டார். திரு. விஜயதுங்கா புலிகளை 'பயங்கரவாதிகள்' என வர்ணித்ததோடு அவர்களுடன் பேச மறுத்தார். அவர் வடக்கு கிழக்கு தமிழ் மக்களுடன் அரசியல் தீர்வைக் காணும் முயற்சியையெல்லாம் தடுத்து நிறுத்தினார். இதனால் நீண்டகால தேசிய நலனை பாதித்ததோடு புலிகளை பலம்பெற செய்தார்.

புலிகள் தன்னுடன் ஒத்துவராததால் அரசியல் முயற்சியை ஜனாதிபதி சந்திரிகா தள்ளிவைத்ததானது ஆபத்தானதும் பாதிப்பை உண்டாக்கும் செயலுமாகும். பிரச்னையான காலத்தில் எதைச் செய்யவேண்டும் எதைத் தவிர்க்கவேண்டுமென இனம் காணத் தவறிய பழைய தலைவர்கள் வழியிலேயே இவரும் செல்வதாக கருத இடமுண்டு.

இனிவரும் மாதங்களில் ஜனாதிபதி சந்திரிகா இரு முனைகளில் தாக்குப்பிடிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. வடக்கில் புலிகளையும், தெற்கில் ஜே. வி. பி. யையும் சமாளிக்கவேண்டிய ஆபத்தான கட்டம் நெருங்குகிறது.

ஒரு நாட்டுத் தலைவர் நடுநிலைவாதியாகத் திகழவேண்டும். திருமதி சந்திரிகா போர் தொடங்கியதும் அரசியல் நடவடிக்கையை தள்ளிவைத்தமையானது தீர்க்க தரிசனமற்றசெயலும் நல்ல ஆலோ

[5-ம் பக்கம் பார்க்க]

# அரசுத் தலைவர்களின் நடமாட்டம் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டது

(கொழும்பு)

அரசுத் தலைவர்களும், முப்படைத் தளபதிகளும் மற்றும் பாதுகாப்பு உயர் அதிகாரிகளும் தங்கள் நடமாட்டங்களைப் பெருமளவில் கட்டுப்படுத்தியுள்ளதாக 'சண்டே ஐலன்ட்' தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையினரின் தாக்குதல்கள் இடம்பெறலாம் என்ற அச்சத்திலேயே இவர்கள் தங்களது நடமாட்டத்தைக் குறைத்துள்ளனராம்.

ஜனாதிபதி சந்திரிகா புதுடில்லியிலிருந்து நாடு திரும்பிய பின்னர் பொதுவைபவங்களிலும், பொதுமக்கள் முன்னிலையிலும் தோன்றுவதைப் பெருமளவில் குறைத்துள்ளார். புதுடில்லியில் நின்றபோது திருமதி சந்திரிகா தன்னை புலிகள் கொல்ல முயற்சிப்பதாக கூறியிருந்தார்.

கடந்த 10 நாட்களில் திருமதி சந்திரிகா எந்தவொரு பொது வைபவத்திலும் கலந்து கொள்ளவில்லை. முன்னர் திட்டமிட்டிருந்த பல நிகழ்ச்சிகளையும் ரத்துச் செய்துள்ளார்.

இதே வேளை முப்படைத் தளபதிகள், எதிர்க்கட்சி தலைவர், முக்கிய அமைச்சர்களின் பாதுகாப்பு மிகவும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்க்கட்சிகளின் தலைவர்களையும் புலிகள் கொல்லக் கூடுமெனவும் சிலர் கருதுகின்றனராம்.

பொலிசார் இராணுவத்தின் உதவியுடன் புலிகளை கண்டு பிடிக்க மிகத் தீவிர தேடுதலில் ஈடுபட்டு வருகின்ற போதும் அவர்களை பிடிப்பதென்பது சுலபமான காரியமல்ல என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்களில் சிலர் புலிகளின் தற்கொலைப்படைப் பிரிவையும், அவர்களின் புலனாய்வுப் பிரிவையும் சேர்ந்தவர்கள் என பொலிஸார் கூறுகின்றனர். -சி

## பணிப்பாளர் திடீர் விஜயம்

(பண்டத்தரிப்பு)

சங்கானை அரசினர்வைத்தியசாலைக்கு கடந்த வாரம் யாழ் சுகாதார சேவை பிரதிமாகாண பணிப்பாளர் வைத்திய கலாநிதி வை. ஸ்ரீகாந்தா, யாழ்சுகாதார திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் திரு. எஸ். மகேந்திரன் ஆகியோர் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

வைத்தியசாலையின் முக்கிய தேவைகள் குறித்தும், குறைபாடுகள் பற்றியும் அங்குள்ள டாக்டர்களுடன் கலந்துரையாடினார்கள் -72

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகிழக்கு உதைபந்தாட்டச் சங்கம் விளையாட்டுக் கழகங்களிடையே அரியாலை சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடாத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இன்றைய ஆட்டங்களின் விபரம் வருமாறு:

இன்று பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும் முதல் போட்டியில் சித்திவிநாயகர் கழகத்தை எதிர்த்து சரஸ்வதி கழகம் மோதும். 2-வது ஆட்டத்தில் எவறெஸ்ட் கழகத்தை எதிர்த்து உதயசூரியன் கழகம் மோதும். 3-வது ஆட்டத்தில் வளர்மதி கழகத்தை எதிர்த்து விண்மீன் மோதும். -வி-சி

# தற்கொலைத் தாக்குதலை தடுக்க பாதுகாப்பான வழிகள் இல்லை

(கொழும்பு)

தற்கொலைப் படைத் தாக்குதலை தடுப்பதற்கு பாதுகாப்பான வழிகள் எதுவுமில்லையென படை அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

கொழும்பில் தற்கொலைப் படைத் தாக்குதலை தடுப்பதற்கு ஒரே வழி அப்படைப் பிரிவைச் சேர்ந்தவர்களை எப்படியாவது தேடிக் கண்டு பிடிப்பதேயாகும்.

இதைவிட திடீர் தாக்குதல் ஒன்று நடைபெறும்போது அதனை தடுத்து நிறுத்தக்கூடிய பாதுகாப்பான வழிவகைகள் எதுவும் தெரியவில்லை எனவும் கூறியுள்ளார். புலிகளின் தற்கொலைப்படையின் அச்சுறுத்தலால் கொழும்பு நகரின் பாதுகாப்பு பெருமளவில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

எனினும் புலனாய்வுத் தகவல்களின்படி கொழும்பு நகரினுள் நூற்றுக்கும் மேற்பட்ட புலிகளின் தற்கொலைப் படை உறுப்பினர்கள் உள்ளனராம். இதில் பெருமளவில் பெண்களும் அடங்குவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை புலிகளை கண்டுபிடிக்க உதவுமாறு பொலிசார் தெற்கில் பொதுமக்களை கோரி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

# வடக்கு-கிழக்கிலிருந்து படையினரை கொழும்புக்கு அனுப்ப முடியாது

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதிகளிலிருந்து படையினரை கொழும்புக்கு கொண்டுவருவது சாத்தியமில்லை என படை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

கொழும்பினதும் அதன் சுற்றுப்புறங்களினதும் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் வடக்கு-கிழக்குப் பகுதிகளிலிருந்து படையினரை கொண்டுவரவேண்டுமென அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

எனினும் வடக்கு-கிழக்கில் தற்போதுநிலவும்சூழ்நிலையால் கொழும்புக்கு படையினரை அனுப்புவது சாத்தியமில்லை எனவும் அவ்வாறு படையினரை அனுப்புவது யுத்தமுனையில் படையினரின் அளவை பெரிதும் பாதிக்கும் எனவும் இராணுவ வட்டாரங்கள் கூறியுள்ளன.

படையினரின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக புதிதாக படைகளுக்கு ஆட்களை சேர்க்கும் இவ்வேளையில் எப்படி வடக்கு கிழக்கிலிருந்த படையினரை வாபஸ் பெறமுடியும் என ஒரு பொலிஸ் அதிகாரி கேள்வி எழுப்பியுள்ளதாக 'சண்டே ஐலன்ட்' கூறியுள்ளது. -சி

# கேலி விளையாட்டு

## கத்திக் குத்தில் முடிந்தது

(யாழ்ப்பாணம்)

முட்டை அடித்துக் கேலி செய்த சம்பவம் கடைசியில் கத்திக் குத்தில் முடிவடைந்தது.

பாஷையூர் பகுதியில் நீண்ட நாட்களாக இரவு நேரங்களில் இனந்தெரியாத கும்பல் ஒன்று வீடுகளில் தனியாக இருப்பவர்கள் மீது முட்டைகளை வீசி விட்டு மறைந்துவிடுகிறார்கள். இந்த முட்டை வீச்சினால் பல தடவைகள் பாதிக்கப்பட்ட ஒருவர் பொறுமையை இழந்து முட்டையை வீசிவிட்டு ஓடிய கும்பலை துரத்திச் சென்று கத்தியால் தாக்கினார்.

காயமடைந்தவர் யாழ், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இந்த முட்டை வீச்சுச் சம்பவம் பற்றி தற்போது காவல் துறையினர் விசாரணை செய்து வருகின்றனர். -வி-சி

# வைத்தியசாலைகளுக்கு திரிபோஷா விநியோகம்

(பண்டத்தரிப்பு)

"மாஹோரா" கப்பல்மூலம் கொழும்பிலிருந்து யாழ் சுகாதார திணைக்களத்திற்கு 2000 பக்கற் 'திரிபோஷ' மா வந்து சேர்ந்துள்ளது.

யாழ் சுகாதாரப்பிரிவி

(5-ம் பக்கம் பார்க்க)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# புலிகள்பற்றி தகவல்தருமாறு 'ரே'விடம் இலங்கை வேண்டுகோள்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் அண்மைக்கால நடவடிக்கைகள் பற்றியும் அவர்களின் எதிர்கால நடவடிக்கைகள்பற்றியும் உளவறிந்து அறிக்கைகளை தரும்படி இலங்கை அரசு இந்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

புலிகளின் செயற்பாடுகளையும் எதிர்கால நடவடிக்கைகளையுமிட்டு தாம் விசேட கவனம் செலுத்தி வருவதாகவும் தமது பாதுகாப்பு நடவடிக்கைகளின் உபயோகத்துக்கு இத் தகவல்களும் அறிக்கைகளும் மிகவும் உபயோகமானவையாக இருக்குமென்று அவ் வேண்டுகோளில் குறிப்பிடப்பட்டிருப்பதாக வெளியுறவு அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்திய அரசிடம் விடுக்கப்பட்ட இக்கோரிக்கையை வெளிவிவகார அமைச்சினூடாக பாதுகாப்பு அமைச்சே விடுத்துள்ளதாம். பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக இந்திய உளவு நிறுவனமான 'ரே' நடாத்திய ஆய்வுஒன்றில் இலங்கை தொடர்பான விடயங்களும் தெரியவந்துள்ளது.

இதன்படி தற்போது நாற்பது தொன்னுக்குமதிகமான அதிசக்திவாய்ந்தவெடிமருந்து பொருட்கள் புலிகளிடம் இருப்பதாக தெரியவந்துள்ளதாம்.

ரேவின் இந்த அறிக்கை இந்திய அரசினூடாக வெளிவிவகார அமைச்சுக்குஅண்மையில் கிடைத்ததை தொடர்ந்தே பாதுகாப்பு அமைச்சு இவ் வேண்டுகோளை இந்திய அரசிடம் விடுத்ததாம்.

இத்தகவலையடுத்து இராணுவத்தின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவுக்கு பல பணிப்புரைகள் விடுக்கப்பட்டிருப்பதாகவும் புலிகள் இந்த வெடி மருந்துகளைக் கொண்டு கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் குண்டுகளை வெடிக்கச் செய்யலாமென அஞ்சப்படுவதாகவும் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். -சி

## மணிவாக்கு

நன்மூக விஷயங்களை அறிபவன் கொஞ்சமாக அறிந்தவனை விட அடக்கமாக இருக்கிறான்.

— அலெக்ஸாண்டர் சேஸ்

## நமது நோக்கு

### ஆலோசனை யாரிடம்?

1939 செப்தெம்பர் மாதம் — பிரிட்டனும் பிரான்சும் ஜேர்மனிக்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்தன. ஜேர்மனியப் படையின் நகர்வுக்கு ஈடுகொடுக்க முடியாத பிரான்ஸ் துரித கதியில் வீழ்ச்சியுற்றது.

''எமது டாங்கிகளின் சக்கரங்கள் மேலும் வேகமாகச் சுழன்றிருந்தால் இன்னும் விரைவாகக் கைப்பற்றியிருப்போம்!'' என்றுதான் ஜேர்மன் டாங்கிப் படைத் தளபதி ரோமல் கூறியிருந்தார்.

1944 — ஜூன் 6-ல் — அமெரிக்க, பிரித்தானியப் படைகள் 'ஒப்ரேசன் ஓவர்லோட்' என்ற பெயரில், பிரான்சின் நோர்மண்டிப் பகுதியில் கடல் வழியாகத் தரையிறங்கின.

ஜேர்மனியப் படையை விரட்டியடித்து பிரான்சை மீட்டன. இரண்டாவது உலகப் போரின் போது பிரான்சின் 'கெட்டித்தனம்' எத்தகையது என்பது வரலாற்றில் பதியப்பட்டுள்ளது

இன்று — சிறீலங்காவில் - 'குண்டினைப் பொழிந்த விமானமும், எறிகணை எறிந்த கப்பலும், வீரமும் களததே போட்டு' ஏங்கி நிற்கின்றது இராணுவம்

இராணுவத்தை உற்சாகப்படுத்த அரசு பகீரதப் பிரயத்தனம் செய்து வருவதை அதன் பிரசார சாதனங்கள் வெளிக்காட்டுகின்றன.

உலக நாடுகள் பல உதவிக்காக ஓடி வருவது போலச் செய்திகள் உருவாக்கப்படுகின்றன.

இந்திய விமான உதவி, பாக்குநீரிணையில் இந்தியக் கடற்படை ரோந்து, ருஷ்ய விமானக் கொள்வனவு, அமெரிக்கஇராணுவ ஆலோசகர்களின் புதிய பாதுகாப்புத் திட்டம் என்ற பட்டியலில் பிரான்ஸ் யுத்த நிபுணர்கள் வருகையும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

சமாதானத் தீர்வுக்கான வெளிப்படையான முயற்சி எனக் கூறிக்கொண்டு கட்டம் கட்டமாகப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றபோது நடந்தது என்ன?

பிரான்ஸ் நாட்டுப் பிரமுகர் ஒருவர் மூலம் இரகசியப் பேச்சுக்களை நடத்த ஜனாதிபதி முயற்சி எடுத்தார்.

இன்று — ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் தனது குடியேற்றநாடுகள் நடாத்திய சுதந்திரப் போருக்கு ஈடுகொடுக்க முடியாது மூக்குடைபட்டுப் போன, இரண்டாவது உலகப் போரில் தனது 'கெட்டித்தனத்தைக்' காட்டிய பிரான்சின் ஆலோசனை எவ்வளவுக்கு உதவப் போகிறது?

# சந்திரிகா, ரணில், ஜே.ஆர்., டி.பியை கொல்ல புலிகள் திட்டமாம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா எதிர்க்கட்சித் தலைவர் திரு ரணில் விக்கிரமசிங்கா, முன்னாள் ஜனாதிபதிகளான ஜே. ஆர். ஜெயவர்த்தனா, டி. பி. விஜயதுங்காவையும் மற்றும் அமைச்சர்களையும் படுகொலைசெய்யும நோக்கில் விடுதலைப்புலிகளின் தாக்குதல் அணியொன்று கொழும்புக்குள் ஊடுருவியுள்ளதாக 'சண்டே ஒப்சேவருக்கு' புலனாய்வுத்துறையினர் தெரிவித்துள்ளனராம்.

அச்செய்தி மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பில் அண்மையில் கைது செய்யப்பட்ட புலிகள் எனச் சந்தேகிக்கப்படும் எண்மரை விசாரித்தபோதே இத் தகவல்கள் பெறப்பட்டுள்ளன. அரச தலைவர்களை கொல்லவென புலிகளின் கமாண்டோ பிரிவொன்று தலைநகருக்குள் நுழைந்துள்ளது.

இத்தலைவர்களை கொலவதுடன் அரச உயர் அதிகாரிகளையும் கொல்ல புலிகள் திட்டமிட்டுள்ளனர். மேலும் முக்கிய அரசமைப்புக்களை தகர்க்கவும் இவர்கள் திட்டங்களை வகுத்துள்ளனர்.

புலிகளின் தாக்குதல் பட்டியலில் அரச, எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 18 பேரின் பெயர்களடங்கியுள்ளதுடன் பாரிய கொழும்பு பிரதேசத்தில் 29 முக்கிய இடங்களை தகர்க்கவும் திட்டமிடப்பட்ள்ளது. இந்த இலக்குகள் யாவும் தற்கொலைப்படைத் தாக்குதல் மூலம் அழிக்கப்படும்

ஜனாதிபதி சந்திரிகா, திரு; ரணில் விக்கிரமசிங்கா, முன்னாள் ஜனாதிபதிகளான திரு ஜே ஆர். ஜெயவர்த்தனா. டி பி. விஜயதுங்கா பிரதி பாதுப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை. வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் உட்பட பல அமைச்சர்களும் எம். பிக்களும் தாக்குதல் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

தாக்கப்படும் முக்கிய இலக்குகளாக கொழும்பு துறைமுகம், கட்டுநாயக்கா விமான நிலையம் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்' ரூபவாஹினி கூட்டுத்தாபனம், முப்படைத் தலைமையகங்கள். மற்றும் முப்படைத் தளபதிகளும் அவர்களது இருப்பிடங்களும் புலிகளால் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதையடுத்து உடனடியாக அரசு மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்களினதும், அமைச்சர்கள், எம் பிக்களினதும் பாதுகாப்புகள் தீவிரப்படுத்தப்பட்டதுடன் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மேற்படி இடங்களினது பாதுகாப்பும் பலப்படுத்தபபட்டுள்ளது

இதேவேளை விடுதலைப் புலிகளின் இந்த தாக்குதல் கமாண்டோ அணிகளை தேடிப் பிடிப்பதற்கு பாதுகாப்பு படையினர் விரிவான திட்டங்களை தீட்டியுள்ளனர். புலிகள் பெரும்பாலும் கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலுமே தாக்குதலை நடத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது,

கொழும்பிற்குள் நுழைந்துள்ளதாக கருதப்படும புலிகளின் தற்கொலைப் படையைச் சேர்ந்த ஒன்பது பேரினதும் விபரத்தையும் 'சண்டே ஒப்சேவர்' வெளியிட்டுள்ளது, -சி

## ஓய்வூதியம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான மே மாத ஓய்வூதியம் பணமாக கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது. -72

## காணமற்போனோர் பதிவு ஆரம்பம்

(கோப்பாய்)

காணமல் போனவர்களைப் பதியும் நடவடிக்கை யாழ். மாவட்ட பதிவகத்தில் இம் மாதம் முதலாம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பதிவிற்காக இதுவரையில் 65ற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் யாழ் மாவட்ட பதிவாளர் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக அறியவருகின்றது. -166

## இராசி பலன்

17-05-1995

புதன்கிழமை

(தமிழுககு வைகாசி -03

திருதிறை முன்னிரவு 7-33 வரை மூலம் பின்னிரவு 3-45 வரை மரணயோகம். இராகு காலம் பகல் 11-53 முதல்1-23 வரை சுபவேளை மாலை 4 23 முதல் 5 53 வரை.

மேடம்- விஷமிகள் துயர். தொழில்முடக்கம், பயனற்ற செயல்

இடபம்- சுபகாரியம், தன் நம்பிக்கை, வாக்குவசீரகம்

மிதுனம்- பணிந்துபோதல் காரியசித்தி, மனக்களிப்பு

கடகம்- முரட்டுத்தனம் குடும்பகவலை, அலைச்சல்

சிங்கம்: தொழில்கஷ்டம், கடன்சுமை, நண்பர்பகை

கன்னி: வேண்டியதுகைகூடல்' இனியஉறவு விருந்து

துலாம்: மனவேதனை, பிதா சிந்தை, இனசனவிரோதம்

விருச்சிகம்: முயற்சிபலிதம், பயணஒழுங்கு, தெய்வீகசெலவு

தனுசு: குடும்பவிவகாரம், கடினசிந்தை' கருத்துமோதல்

மகரம்: விரோதிகளை ஜெயித்தல், தொழில்பாராட்டு' அதிர்ஷ்டம்

கும்பம்: பொதுப்பணி,எதிர்பாராதஉதவி, பணவரவு

மீனம்- உறவினர்கோபம். புத்திரர்செலவு, தர்க்கவாதம்

— ஜோஸ்யர்

## பலதும் பத்தும்

### மெய்நெறி முப்பது

ஔவையார் அருளிய ஆத்திசூடி போன்ற அருமையான வாழ்க்கை வழிகாட்டிகளைப் படித்து. அதன் ஆழமான கருத்துக்களை உணர்ந்து கடைப்பிடிப்போர் தொகை அருகி வருகிறது.

இன்று - காலத்திற்கு ஏற்ற வகையில் எளிமையான முறையில், கையடக்கமான வகையில் வழிகாட்டிகள் வந்து கொண்டிருக்கின்றன. அந்த வகையில் 'மெய்நெறி முப்பது அறநெறி அறுபது' என்ற சிறிய கையேடு தற்காலச் சிறுவர்களுக்கு ஏற்ப அமைநதுள்ளது.

நாடு. மொழி, கலை ஆகியவற்றின் மீது பற்றுக்கொண்டு பேணிக் காத்திடவும், விஞ்ஞானம், பொருண்மியம், சமூகப் பொது நன்மைகள் போன்ற சிந்தனைகளைச் சிறுவர்உள்ளத்தில் பதியவைக்கவும் இது உதவுகின்றது. கல்விப்பணிப் பணிப்பாளர் ச. சுப்பிரமணியம் உருவரக்கிய இந்த நூலை செம்மைப்படுத்த மறைந்த கல்விப்பணிப்பாளர் இ. சிவானந்தம் உதவியிருக்கிறார்!

— மயூரன்

# துணிவிருந்தால் சந்திரிகா என்னை தேர்தலில் சந்திக்கட்டும்

## ஜே. ஆர். சவால்

(கொழும்பு)

''இந்தியா ருடே'' பத்திரிகைக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அளித்த பேட்டியைக் காரசாரமாகக் கண்டித்த முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர், ஜெயவர்த்தனா இது குறித்து நாடு தழுவிய தேர்தலில் தன்னோடு போட்டிக்கு வருமாறு ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அறைகூவல் விடுத்துளார்.

திரு ஜே, ஆர். ஜெயவர்த்தனா இது குறித்து பததிரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

நான் காலஞ்சென்ற ராஜீவ் காந்தியை ஏமாற்றி இந்திய சமாதானப் படையை இலங்கைக்கு வரவழைத்ததாக திருமதி சந்திரிகா 'இந்தியா ருடே.' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறியதையிட்டு வேதனையடைகிறேன், ஒரு பெரிய நாட்டுத் தலைவரை அப்படி ஏமாற்றியதாக நான் கருத இடமில்லை, அவர் இந்தியாவின் அக்கறையில் அமைதிப் படையை இங்கு அனுப்பியிருக்கலாம், ஆனால் நான் எமது சிறிலங்கா நாட்டின் நலனில் அக்கறை கொணடதனாலேயே அதற்கு சம்மதித்தேன். நான் பதவியிலிருக்கும்போது செய்தது சரியென்பது தற்போதைய சூழ்நிலையில் நிரூபணமாகிறது.

இதனாலே தான் திருமதி சந்திரிகா இந்தியாவின் உதவியைத் தற்போது கோருகிறார்.

சண்டையில் மரணமாகும் யாரைப்பார்த்தும் நான் மகிழ்ந்ததில்லை அது இந்தியனாக இருந்தாலென்ன, இலங்கையனாக இருந்தாலென்ன அது ஒரு துக்ககரமான நிகழ்வே.

ஒரு அந்நிய நாட்டு பத்திரிகை நிருபருக்கு திருமதி சந்திரிகா அளித்த ஒரு பேட்டியை நான் அமைதியாக இருந்து எழுதினால் கூட இவ்வளவு கேவலமான வார்த்தைகளை பிரயோகிக்கமாட்டேன் எனவும் ஜே. ஆர், ஜெயவர்த்தனா விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்

-கே-சி

# யுத்தத்திற்கு தயாராகுமாறு

## படையினருக்கு சிறிமா அழைப்பு

(கொழும்பு)

மருத்துவ சிகிச்சைக்காக நான் வெளிநாடுசென்றிருந்த கடந்தசில வாரங்களில் இலங்கையில் நிகழ்ந்த பாரதூரமான துயரமிகு சம்பவங்கள் குறித்து ஆழ்ந்த கவலை அடைகிறேன்.

இவ்வாறு லண்டனில் தனது

(5ம் பக்கம் பார்க்க)

வீட்டினில் எங்கும் வேளாண்மை
செய்வோம் - அதில்
வேண்டியபலனை வாழ்வினில் காண்போம்

# புலிகளுக்கு எதிராக இராணுவத்தீர்வு தமிழ்க் கட்சிகளுடன் அரசியல் தீர்வு

## ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்துள்ளார்

[கொழும்பு]

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவத் தீர்வையே மேற்கொள்வதென இலங்கை அரசு திட்டமிட்டுள்ளதாக நம்பகரமாக தெரியவருவதாக 'சண்டே லீடர்' தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுப்பதெனவும் அரசியல் தீர்வு தொடர்பாக தமிழ் அரசியல் கட்சிகளுடன் பேசுவதெனவும் ஜனாதிபதி சந்திரிகா புலிகளுடனான நாலாம்கட்ட சமாதானப் பேச்சில் கலந்து கொண்ட ஒருவருக்கு தெரிவித்துள்ளார்.

இதன்படி அரசு போரை மிகப்பெரும்எடுப்பில் நடாத்த திட்டமிட்டுள்ளதாகவும் இதற்குத் தேவையான சகல உதவிகளையும் முப்படையினருக்கும் வழங்க ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது இதற்கேற்ப ஜனாதிபதி சந்திரிகா அடிக்கடி முப்படைத்தளபதிகளை சந்திப்பதுடன் யுத்தமுனைச் செய்திகளை உடனுக்குடன் கேட்டறிந்து கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் கடந்த சில வாரங்களில் படையினருக்கு ஏற்பட்டுவரும் பாரிய இழப்புகள் குறித்து அரசு கவலையும் அதிர்ச்சியுமடைந்துள்ளதாம். சி

# சகல கட்சிகளுடன் தீர்வுத் திட்டம் குறித்து சந்திரிகா பேச்சு நடத்துவார்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா சகல அரசியல் கட்சிகளையும் தனித்தனியே சந்தித்து இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வுத் திட்டம் குறித்த பேச்சுக்களை நடாத்துவார் என அதிகார பூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசியலமைப்பு விவகாரங்களுக்கான பாராளுமன்ற தெரிவுக் குழுவிடம் இத் தீர்வுத் திட்டம் இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை என்றாலும் ஜனாதிபதி சந்திரிகா பிரதான எதிர்க்கட்சித் தலைவர் ஒருவருடன் இத்திட்டம் குறித்துப் பேசினார் என அவ்வட்டாரங் மேலும் தெரிவிக்கின்றன.

தீர்வுத்திட்ட அம்சங்கள் பற்றி ஜனாதிபதி அத் தலைவரிடம் எடுத்துக்கூறினார், ஆயினும் முதலில் அதனை தெரிவுக் குழுவின் முன் வைக்குமாறு அவர் கேட்டுக்கொண்டதாக 'சண்டே ஐலன்ட்' தெரிவிக்கிறது.

தெரிவுக் குழுவிடம் திட்டம் சமர்ப்பிக்கப்படமுன் ஜனாதிபதி எல்லா அரசியல் கட்சிகளுடனும் தனித்தனியாக அது குறித்து ஆலோசிக்கவுள்ளார் எனவும் தெரியவருகிறது.

தீ-சி

## பங்கீட்டு பொருள் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் தனது கிளைகள் ஊடாக பங்கீட்டு அ‘உ’ அட்டைக்கு 3 லீற்றர் மண்ணெண்ணை, 2 சன்லைற் 1 லக்ஸ், 2 கிலோ சீனி, 2 தீப்பெட்டி ஆகியனவற்றை விநியோகம் செய்து வருகின்றது. -72

# அமெரிக்க உதவி கிடைக்கும் வரை இந்தியா இராணுவ உதவி

(கொழும்பு)

அமெரிக்காவிடமிருந்து இராணுவ தளபாட உதவிகள் கிடைக்கும்வரை இந்தியாவிடமிருந்து மாற்று அடிப்படையில் போர் விமானங்களின் உதவியை பெறுவதென இலங்கை அரசு தீர்மானித்துள்ளது.

இலங்கைப்படையினர் மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதலை விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடாத்துவதற்கு அமெரிக்க அரசு இராணுவ தளபாட உதவிகளையும் வேறுவகை உதவிகளையும் வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு அமெரிக்கா பெருமளவு போர்த் தளபாடங்களை கடன் அடிப்படையில் உடனடியாக வழங்கவும் முடிவு செய்துள்ளது. இதற்கான பேச்சுவார்த்தைகளை இலங்கை அரச அதிகாரிகள் அமெரிக்க தூதரக அதிகாரிகளுடன் நடாத்தியுள்ளதுடன் அரச அதிகாரிகள் குழுவொன்று விரைவில் அமெரிக்கா செல்லவுள்ளது.

இதேவேளை இலங்கைபடை அதிகாரிகளைக்கொண்ட பல குழுக்கள் வெளிநாடுகளுக்கு இராணுவ தளபாடங்களை கொள்வனவு செய்வதற்காக சென்றுள்ளன. இக்குழுக்கள் மிகவிரைவில் நாடு திருப்புமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. -சி

# இரவில் இடம்பெயரும் நவக்கிரி மக்கள்

(மானிப்பாய்)

நவக்கிரி, தோப்பு பகுதி மக்கள் தற்போது தினமும் இரவு வேளையில் புத்தூர் சிவன் கோவிலுக்குச் சென்று தங்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் விடுதலைப்புலிகளின் தாக்குதலினால் வானில வெடித்துச் சிதறிய அவ்ரோ விமானமொன்று நவக்கிரிப் பகுதியில் வீழ்ந்ததைத் தொடர்ந்து பலாலியில் உள்ள படையினர் தினமும் இரவு வேளையில் அப்பகுதியிலுள்ள குடிமனைகளைநோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டு வருவதனால் தாம பகல் வேளையில் சமைத்துச் சாப்பிட்டு பின்னர் இரவு வேளையில் இந்த ஆலயத்திற்குச் சென்று தங்கி வருவதாக தெரிவிக்கின்றன. 71-சி

# கிழக்கு பொலிஸ் நிலையங்களிலிருந்து 100பொலிஸார் தப்பியோட்டம்

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகளுக்கும் அரச படையினருக்குமிடையில் மீண்டும் மோதல்கள் வெடித்ததைத் தொடர்ந்து கடந்த ஒரு மாதத்தில் 100க்கும் மேற்பட்டபொலிசார் தலைமறைவாகி விட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர்கள் எவருமே லீவுக்கடிதம் சமர்ப்பிக்காமல் வேலையிலிருந்து விலகிச் சென்றுள்ளதால் இவர்களின் பதவிகள் காலியாகிவிட்டதாக பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது. இன்னும் பல பொலிஸார் குறிப்பிட்ட தினங்களுக்கு லீவு பெற்றுச் சென்று பின்னர் கடமைக்கு திரும்பவில்லையாம்.

இதனால் கிழக்கில் தினமும் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிளாவது வேலையை இழந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் 59 பொலிஸ் நிலையங்களும் 59 இராணுவ முகாம்களும் உள்ளனவாம் இதைவிட மேலதிகமாக பல பொலிஸ் நிலையங்களும் இராணுவ முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளன.

பொலிஸில் சேர்ந்து யுத்தப் பிரதேசங்களில் 6 மாதத்திற்குமேல் கடமையாற்றிய பின்பும் இடமாற்றம் கிடைக்காததாலேயே இவர்கள் தப்பி ஓடுவதாக பொலிஸ் திணைக்களம் கூறுகின்றது.

இவர்கள் தப்பி ஓடுவதால் பாதுகாப்பில் பெரும் பிரச்சனை ஏற்பட்டுள்ளதாம். -சி

# டென்மார்க் செல்லும் தமிழர் தொகை குறைவு

(நெல்லியடி)

டென்மார்க் செல்லும் இலங்கை அகதிகள் பலருக்கு அகதிகள் அந்தஸ்தை வழங்க அந்நாட்டு அரசு மறுக்கின்றது.

இதனால் அங்கு செல்வோரின் எண்ணிக்கை பெருமளவு குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கடந்த வாரம் டென்மார்க்கிலிருந்து வடமராட்சிக்கு வந்த புலோலி கிழக்கு சந்தா தோட்டத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்துள்ளார். -160

# ★ மருந்துகள் மாயம் யாழ். ஆஸ்பத்திரியில் திடீர் பரிசோதனைக் குழு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நிர்வாகம திடீர் பரிசோதனைக் குழு ஒன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

யாழ் போதனா வைத்தியசாலையில் மருந்துகள் சிலவற்றுக்கு திடீரென தட்டுப்பாடு நிலவுகின்றது மருந்துகள் வைத்தியசாலைக்கு வெளியே அனுமதி இன்றி எடுத்துச் செல்லப்படுவதே இத் தட்டுப்பாட்டுக்கு காரணமாகவுள்ளதாம்.

இவற்றிற்கு அமைய ஆஸ்பத்திரி ஊழியர்கள் அனுமதி இன்றி மருந்துகளைக் கொண்டு சென்றால் இப்பரிசோதனைக் குழுவால் பிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. 170 - சி

# பெற்ற தாயை கத்தியால் குத்திய மகன்

(நெல்லியடி)

பெற்ற தாயை கத்தியால் குத்திய மகன் பருத்தித்துறை காவல் துறையினரால் கைது செய்யப்பட்டார்.

கரவெட்டி அத்துளு அம்மன் ஆலயத்திற்கருகில் இச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

முதுகிலும், கையிலும் கத்திக்குத்துக்கு இலக்கான அதே இடத்தைச் சேர்ந்த பொ. பொன்னம்மா (வயது 50) என்பவர் மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இவரது 32 வயது மகனை பருத்தித்துறை காவல் துறையினர் கைதுசெய்துள்ளனர். 160 - சி

# காஷ்மீர் பாகிஸ்தானாகிவிட்டது ஜம்மு சுவர்களில் சுலோகங்கள்

(சிறிநகர்)

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் ஷரார். ஏ. ஷரீப் பள்ளிவாசல் எரிக்கப்பட்ட சம்பவத்தின் பின் அப்பகுதியில் மீண்டும் அமைதியை ஏற்படுத்த இந்திய அரசு முயற்சித்து வருகிறது.

கடந்த வியாழக்கிழமை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த புனிதஸ்தலம் எரிக்கப்பட்டதை தொடர்ந்து இப்பகுதி உட்பட காஷ்மீரின் பல பாகங்களிலும் ஊரடங்கு உத்தரவு போடப்பட்டு கலவரங்கள் ஏற்படாமல் ஒருவாறு அடுக்கப்பட்டன. இருந்தும் சொந்தளிப்பு நிலை ஓயவில்லை.

ஷரார்-ஏ-ஷெரீப் பகுதியில் ஊரடங்குஉத்தரவை சொற்பவேளை தளர்த்தியபோதுஅங்கு விஜயம் செய்த பி. பி. சி. முகவர் கூறியதாவது:-

ஷரார்-ஏ-ஷெரீப்பில் தெருநாய்களும், பறவைகளும் மட்டுமே இருப்பதுபோல் தெரிகிறது.

17-ம் நூற்றுண்டைசேர்ந்த இந்த புனித ஸ்தலம் எரிக்கப்பட்டமையால் அது சுடுகாடு போல் காட்சியளிக்கிறது.

எரிந்த வீடுகள் கட்டிடங்களிடையே ஈக்கள் மொய்ப்பதால் இன்னமும் சடலங்கள் இருப்பதாகவே தென்படுகிறது. இடிந்து மீதமிருந்த சுவர்களில் உருது மொழியில் "காஷ்மீர் இப்போது பாகிஸ்தானாகிவிட்டது" என எழுதப்பட்டிருந்தது.

நகரின் பெரும்பாலான கட்டிடங்கள் இன்னமும் எரிந்தபடியே இருக்கின்றன. ஒவ்வொரு வீட்டின் கூரையும் தகர்க்கப்பட்டிருந்தது.

புனித ஸ்தலத்தின் வீதி வழியே புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகளை அகற்றும் வேலையில் படையினர் ஈடுபட்டிருந்தனர். அவை தீவிரவாதிகளால் புதைக்கப்பட்டதாக அவர்கள் கூறினர்.

21 தீவிரவாதிகளின் சடலங்களை தாம் கண்டு அகற்றியதாக அதிகாரிகள் கூறினர். ஆனால் மாண்டவர்களில் அதிகமானோர் பொதுமக்களே என வேறு சிலர் சொன்னதாக பி. பி. சி முகவர் மேலும் கூறினர்.

இதே வேளை ஷரார்-ஏ-ஷெரீப் முஸ்லிம் புனித ஸ்தலம் எரிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பாகிஸ்தானில் பெரும் ஆர்ப்பாட்டம் நடத்த ஏற்பாடாகியுள்ளது. -கே சி

# விஜேதன் கொலைக்கு ஈ.பி.டி.பி.யே காரணமாம்

(கொழும்பு)

சுதந்திரக்கட்சியின் முன்னாள் யாழ். மாவட்ட அமைப்பாளரும் அண்மையில் கொழும்பில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டவருமான விஜேதனின் கொலைக்கு ஈ. பி. டி. பியே காரணமென பலரும் குற்றம் சாட்டியுள்ளனர் என 'சண்டே லீடர்' கூறியுள்ளன.

இதுகுறித்து தமிழ் வட்டாரங்களும் ஈ. பி. டி. பியையே சந்தேகிக்கின்றன. இத்தமிழ் வட்டாரங்கள் எல்லாம் இக்கொலைக்கு ஈ. பி. டி. பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவே காரணமென சுட்டிக்காட்டியுள்ளன.

எனினும் இதற்கும் தங்களுக்கும் எதுவித தொடர்புமில்லையென டக்ளஸ் தேவானந்தா மறுப்பு தெரிவித்துள்ளார். -சி

# ‘கீழ்த்தரமான அரசியல்வாதியாய் இருந்திருந்தால் எல்லாத் தேர்தலிலும் வென்றிருக்கமாட்டேன்’

## சந்திரிகாவின் பேட்டிக்கு ஜே. ஆர். பதில்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா என்னை அழுக்கடைந்த அரசியல்வாதி என ''இந்திய ருடே'' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். அப்படி நான் இருந்திருந்தால் எப்படி நான் என் பதவிக்காலத்தில் எல்லாத் தேர்தல்களிலும் வென்றிருக்க முடியும்

''இந்தியா ருடே'' பத்திரிகைக்கு திருமதி குமாரதுங்கா அளித்த பேட்டியை மறுதலித்து ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகைக்கு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அளித்த பேட்டியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அப்பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது: நான் ஒரு கீழ்த்தரமான அரசியல் வாதியாகஇருந்திருந்தால் அப்படியானவரையே இந்த நாட்டு மக்கள் விருய்பியிருக்கிறார்கள்போல் தெரிகிறது, நான் ஒரு தேர்தலிலும் தோல்வியடையவில்லை நான் திருமதி சந்திரிகாவுடன் போட்டியிடவும் தயார்அவர் என்னோடு இந்த விடயத்தில் போட்டியிடட்டும்.

திரு. பிரேமதாசா மீதும், என் மீதும் அவர் எழுப்பிய குற்றச்சாட்டுக்களை, வார்த்தைப் பிரயோகங்களை அச்சடித்து அதனையே பிரசாரமாக பாவித்து போட்டி போடவும் நான் தயார்.

நான் ஒரு பொய்காரனென அவர் கூறியுள்ளார், 1920-ம் ஆண்டிலிருந்தே மகாத்மா காந்தியின் ஒரு பிரியன் என்பதை நான் அவவுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன், எனது சொந்த வாழ்விலும், பிரத்தியேகமான வாழ்விலும் ஒரு காலமும் பொய் கூறி அறியேன். அப்படியாயின் எப்படி நான் கீழ்த்தரமான அரசியல்வாதியாகவும்.பொய்காரனாகவும் இருக்கமுடியும். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அதனை அவர் நிரூபித்துக் காட்டட்டும்.

திரு. ராஜீவ் காந்தியை நான் ஏமாற்றியதாக இவர் கூறுகிறார். இந்த விபரங்களை இவர் எங்கேயிருந்து பெறுகிறார். அவருக்கு வேண்டுமாயின் நான் விபரங்களை கற்பித்து காட்டுவேன்.

1980 களில் தமிழக முதல்வராக இருந்த எம். ஜி. இராமச்சந்திரன் திரு. பிரபாகரனுக்கு ஆயுதம் பணம், மற்றும் மனித வளம் கொடுத்து ஆதரவு நல்கினார். கருணாநிதியை மடக்க திரு. பிரபாகரனுக்குபடையமைக்க எம்.ஜி.ஆர். உதவினார். பகிரங்கமாக பண முடிச்சும் வழங்கி உதவினார்.

திரு. பிரபாகரன் எம். ஜி. ஆரைக் கேட்டு எதையும் பெறும் நிலையில் இருந்தார்.

எம். ஜி. ஆர். இறந்ததும், திரு. ராஜீவ் காந்தி திரு. பிரபாகரனை டில்லிக்கு வரவழைத்து, ஆயுதத்தைக் கைவிடுமாறு கேட்டுக்கொண்டார்.

திரு. ராஜீவ் காந்தி பிரபாகரனுடன் தான்கதைத்ததாகவும் அவருக்கு நம்பிக்கைஊட்டியதாகவும் கூறினார். திரு. காந்தியின் வேண்டுகோளுக்கிணங்க அவருடன் இங்கு பேசினோம்.

அந்நேரம் அமைதிப்படை யாழ்ப்பாணம் வந்தபோதும் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர். மூன்று மாதம் நிலைமை சீராக இருந்தபின் இரு தரப்பினரிடையேயும் போர் வெடித்தது.

திரு. ராஜிவ்காந்திக்கு எல்லா விபரமும் அதன் முக்கியத்துவமும் பிரதிபலிப்புகளும் நன்குபுரியும். நானும் ரஜிவும் இணைந்து செயற்பட்டோம். இதனாலேயே அவர் கொலை செய்யப்பட்டார்.

ஆகவே திருமதி சந்திரிகாவின் கூற்று திரு. ராஜீவ் காந்தியை அவமதிப்பதாக அமையும் என்றும் அப்பேட்டியில் ஜே. ஆர் தெரிவித்துள்ளார். கே-சி

## ‘வித்தி’ நினைவுப்பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனின் மூன்றாவது நினைவுப் பேருரை இன்று புதன்கிழமை பி.ப 3-00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்

இப்பேருரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் அ. சண்முகதாஸ் நிகழ்த்தவுள்ளார். புறநானூறு காட்டும் தமிழர் சால்பு- ஒரு மீள் பார்வை என்றும்பொருள் பற்றியதாக இப்பேருரை அமையும். சி

## ‘மிக்’ விமான கொள்வனவிற்கு கேள்வி அறிவித்தல் கோரப்பட்டது

]கொழும்பு]

விமானப் படைக்கு ‘மி’ வகை விமானங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. இதற்கான கேள்வி அறிவித்தல்கள் கோரப்பட்டுள்ளதாக விமானப்படைத் தளபதி ஏயர் வைஸ் மாஷல் ஒலிவர் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; புலிகளின் ஏவுகணைத் தாக்குதல்களை முறியடிப்பதற்கான எதிர் ஏவுகணைகள் உபகரணங்களையும் ‘ராடர்’ கருவிகளையும் பெற நடவடிக்கைகள் எடுககப்பட்டுள்ளன.

யுத்தத்தில் விமானத் தாக்குதல்கள் நடத்தப்படும்போது வெளிநா யுத்த நிபுணர்களின் உ யையும் ஆலோசனையையும் பெறுகொள்ளவும் ஒழுங்குக செய்யப்படுகின்றன. புதியவிமானங்களும் உபகரணங்களும் கொள்வனவு செய்யப்படும்வரை விமானப் படையினர் உபயோகத்துக்கு போதுமான பலமும் வசதிகளும் இருக்கின்றது.

விமானத்தின் உஷ்ணத்தை நாடி வரும் ஏவுகணையினை திசைதிருப்பும் உபகரணங்கள், ஏவுகணையின் திசையைத் துல்லியமாகக் காட்டும் ‘ராடர்’ கருவிகள் விமான, எஞ்சின் பாதுகாப்பு உபகரணங்களும் யுத்த விமானக் கொள்வனவின் போதே கொள்வனவு செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். -சி

## மோசமான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சனையைப் பெருமையையுமே காட்டுகிறது.இனிவரும்மாதங்களில் சிறிலங்கா அரசு பாதகமான காலங்களை எதிர்கொள்ளத் தொடங்கியதையே இது புலப்படுத்துகிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். கே-சி

## வைத்தியசாலையில்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

லுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கும் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களுக்கும் இவ்வாரம் தொடக்கம் திணைக்கள லொறி மூலம் மேற்படி திரிபோஷ மா நேரடியாக கொண்டு சென்று விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

சுகாதாரத் திணைக்கள சிகிச்சை நிலையங்களில் அதாவது கிளினிக்குகளில் போஷாக்கு குறைந்த கர்ப்பிணித் தாய்மாருக்கும், போஷாக்குக் குறைந்த குழந்தைப் பிள்ளைகளுக்கும் இந்த திரிபோஷா மா இலவசமாக டாக்டரின் சிபார்சின் படி வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. 72 - சி

## முப்படை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர் முன்னர் பதவி வகித்த இரண்டாவது நடவடிக்கை இராணுவ பிரிவின் தளபதிப்பதவியிலும் தொடர்ந்து இருப்பார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டாவது நடவடிக்கை பிரிவு தளபதியாக நியமிககப்பட்ட மேஜர் ஜெனரல் கெமுனு குலதுங்க தனது ஆனையிறவு, பூநகரி, முல்லைத்தீவு பிராந்திய தளபதி பதவியில் தொடர்ந்தும் இருப்பார் எனவும் அரசு தரப்பினர் மேற்கோள்காட்டும் செய்திகள் தெரிவிக்கின்றன, -ரி

## ஆனையிறவு

(1-ம் பககத்தொடர்ச்சி)

இதனையடுத்து ஆனையிறவு, பூநகரி முகாம்களை காப்பாற்றுவது தொடர்பான திட்டத்தை மேஜர் ஜெனரல் கெமுனு குலதுங்கா இராணுவத் தளபதிக்கு வழங்கியுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தற்போது விமானப்படையிடமுள்ள அதி உயர் சக்திவாய்ந்த தாக்குதல் விமானமான சுப்பசொனிக் பற்றிய தகவல்களை கொழும்பு பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன.

ரஷ்யாவின் மிக் 21 ரக விமானத்துக்கு இணையான சீனாவின் எவ்-7 சுப்பசொனிப் விமானம் ஓர் இயந்திரத்தையும் ஒரு இருககையையும் கொண்டதாகும்.

250 கிலோ எடை கொண்ட குண்டுகளை தாங்கி வந்து வீச வல்லது என தகவல்கள் கூறுகின்றன. ரி

## இராணுவ தலைமைப் பீடத்தை மாற்றியமைக்க கோரிக்கை

(கொழும்பு)

இராணுவ தலைமைப் பீடத்தை மாற்றி அமைப்பதற்கு பொதுசன ஐக்கிய முன்னணியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒரு கோஷ்டியினர் அரசாங்கத்துக்கு நெருக்குதல் கொடுக்கவிருக்கிறார்கள் என்று ‘திவயின பத்திரிகை தெரிவித்துள்ளது.

யுத்தத்திற்கு முகம்கொடுக்கும் வகையில் புதிதாக இராணுவ தலைமைப் பீடத்தை மாற்றி அமைக்குமாறே இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தை கேட்டுக் கொள்ள இருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக எடுக்கும் இராணுவ நடவடிக்கைளில் வெற்றி அடையும் முகமாக இராணுவத்தில் போர் புரிவதில் திறமை வாய்ந்த தலைமையின் கீழே இராணுவக் கட்டமைப்பு இருக்க வேண்டுமென்று இவர்கள் அரசாங்கத்திடம் தெரிவிக்க இருக்கிறார்கள். -ம-சி

## அரசு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கான வேலைத்திட்டங்களும் வகுக்கப்பட்டு பெரும் எடுப்பில் அபிவிருத்தி திட்டங்கள் குறித்து அரசு தரப்பினரால் பிரசாரங்களும் மேற்கொள்ளப்பட்டன.

வடபகுதி புனர்நிர்மாண வேலைகளை கவனிப்பதற்கென அமைச்சர் ரத்னசிறி விக்கிரம நாயக்கா தலைமையில் விசேட செயலணிக்குழு ஒன்றும் ஜனாதிபதி சந்திரிகாவினால் நியமனம் செய்யப்பட்டதும்குறிப்பிடத்தக்கது.

தற்போது இவையாவும் இரத்துச் செய்யப்பட்டு இதற்கென ஒதுக்கப்பட்ட நிதி பாதுகாபபு படையினருக்கு செலவு செய்யப்படவுள்ளதாக தெரியவருகிறது. ரி

## யுத்தத்துக்கு

(3ம் பக்கத் தொடர்ச்சி)

சிகிச்சையை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

அரசு புலிகள் சமாதானப் போச்சுவார்த்தை முறிவடைந்து போர்நிறுத்த உடன்பாடு கைவிடப்பட்டதை அடுத்து முப்படைகளிலும் ஏற்பட்ட பாரிய இழப்புக்கள் குறித்தே பிரதமர் தனது கவலையை வெளியீட்டுள்ளார் போரில்கொடுமையாகக் கொல்லப்பட்ட படைவீரர்களது குடும்பங்கள் படும் துயரத்தில் நான் பங்கு கொள்கின்றேன். ஆயினும் சமீபத்தில் ஏற்பட்ட தோல்விகள் பின்னடைவுகளால் ஆயுதப்படையினர் மனந்தளரக் கூடாது. தைரியங் கொண்டு மீண்டும் சண்டையிடத் தயாராக வேண்டும் நாம் வேண்டுவது சமாதானமே ஆனால் அதற்காக எதையும் விட்டுக்கொடுப்போம் எனக்கருதமுடியாது புலிகளுக்குத் தேவை சமாதானம் அல்ல நாட்டின் பிரிவினையே என்றார். தீ-சி

## பூநகரி முகாமில் ஹெலி இறங்கியது?

(கொழும்பு)

இம் மாதம் 13ம் திகதி ஹெலிகாப்டர் ஒன்று பூநகரி இராணுவ முகாமினுள் உள்ளிறங்கி அங்கிருந்து காயப்பட்ட வீரர்களை அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றதாக பூநகரி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி பிரிகேடியர் சிசிர விஜேசூரிய தெரிவித்ததாக லங்காதீப பத்திரிகை தெரிவித்துள்ளது.

அவர் இராணுவத் தளபதி ஜெரி டி கில்வாவுக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு முகாமில் தங்கியுள்ள அனைத்துப் படையினரும் எந்தத் தாக்குதல்களுக்கும் ஆயத்த நிலையில் இருக்கின்றார்கள் என்றும் கூறினாராம். ம

## அதிவேக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

‘லங்காதீப’ பத்திரிகை தெரிவித்துள்ளது.

வடக்கில் அமைந்துள்ள பூநகரி, பலாலி, ஆனையிறவு ஆகிய பிரதான முகாம்கள் இராணுவத்தலைமைப் பீடத்தின் கீழ் தொடர்ந்து இயங்கி வருகின்றது என்றும் அந்த முகாம்களில் படைவீரர்கள் அரசாங்கத்துக்கு எதிராகஎந்த விதமான தொந்தரவு தரவில்லை என்றும அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகாவின் அழைப்பின் பேரில் ஜனாதிபதியைச் சந்தித்த எதிர்கட்சித் தலைவர் திரு. ரணில் விக்கிரமசிங்கவிடம் மேற்கண்ட விபரங்கள் ஜனாதிபதியால் தெரிவிக்கப்பட்டது என்றும் அமைச்சர் அனுரத்த ரத்வத்த மேலும் தெரிவித்தார். ம-ш

## போரை வழிநடத்த தேசிய சபை வேண்டும்

(கொழும்பு)

வடக்கில் இடம்பெறும் யுத்தத்தில் நீண்டகால குறுகிய கால தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விதத்தில் எல்லா அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய ‘தேசிய சபை’' ஒன்று நிறுவவேண்டும் என்று ‘லங்காதீப’ பத்திரிகை செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

லண்டனில் இருந்த போர்க்கால அமைச்சர்குழு மாதிரியாக இந்தத் தேசிய சபை அமையவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கா அரசாங்கத்திடம் யோசனை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

யுத்தகால சட்டங்கள், வெளிநாட்டுதவி பெறுதல், மற்றும் மக்கள் தெரிவிக்கும் கருத்துக்களை ஆராய்தல் போன்றவிடயங்களை கலந்துரையாடி ஒரு தீர்மானம் எடுக்கக்கூடியதாக இந்த தேசிய சபை அமைய வேண்டும் என்றும் ரவி கருணநாயக்கா மேலும் தெரிவித்துள்ளார். -ம-சி

## மெய்வல்லுநர் போட்டி

[கொழும்புத்துறை]

யாழ். அரியாலை மேற்கு காந்தி சனசமூக நிலையத்தின் 45வது ஆண்டு நிறைவுவிழாவும், வருடாந்த மெய்வல்லுநர் போட்டியும், கலை நிகழ்ச்சிகளுன் அண்மையில் நடைபெற்றன. -154

# "புலிகளை பேச்சுக்கு வரச்செய்ய அரசு காலக்கெடு விதிக்கவேண்டும்"

## முன்னாள் தளபதி ஹரி குணதிலக

(கொழும்பு]

அரசாங்கம் விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தைக்கு வருமாறு ஒரு காலக்கெடுவை விதிக்க வேண்டும் அதற்கு புலிகள் இணங்காவிட்டால் மாத்திரமே வேறு வழி பற்றிச் சிந்திக்க வேண்டும். முன்னாள் விமானப்படை தளபதியும், ஹரி குணதிலக இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தனது மகன் யாழ்ப்பாணத்தில் புலிகளால் அவ்ரோ விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டு இறந்த செய்தியைக் கேள்வியுற்றதும் அவரும் அவரது மனைவியும் சிறு இருதய தாக்கத்திற்கு ஆட்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது,

திரு. ஹரி குணதிலக மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது அரசாங்கம் சமாதான முயற்சியை கைவிடவில்லை எனக் கூறுகிறது. அதை நானும் வரவேற்கிறேன் அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு வருமாறு புலிகளுக்கு மூன்று மாத காலக்கெடுவை விதிக்க வேண்டும் அந்த காலக்கெடுவுக்குள் புலிகள் வராவிடில், வேறு வழிமுறையை கையாளலாம்.

புலிகளுக்கு சர்வதேச ரீதியில் காரியாலயங்கள் உண்டு. சர்வதேச சமூகம் அவர்களை சமாதானப் பேச்சுக்கு உந்தச் செய்ய சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

அரசாங்கம் எல்லா வழிகளாலும் முயற்சித்தது என்பதனை சர்வதேச சமூகம் அறியச் செய்ய வேண்டும். இராணுவ தீர்வுக்கு இறங்க முன் இந்த வழிமுறைகளை கையாள வேண்டும். அது தோல்வியுறும் பட்சத்தில் மாத்திரம் தீர்க்கமானதும் இறுதியானதுமான முடிவை எடுக்க வேண்டும்.

எனது முதலாவது மகன் விங் கொமாண்டர் ஹிராந்த அவ்ரோ விடுதலைப்புலிகளால் சுட்டு விழுத்தப்பட்ட போது பலியானார். 2-வது மகனும் விமானப்படையில் சேர்ந்து அமெரிக்காவில் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார். அவரையும் இழக்க நான் விரும்பவில்லை என்றும் அவர் கூறினார். கே ரி

## அரசின் தவறுகள் குறித்து ஐ. தே. க. பிரசாரப் போர்

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு பிரச்சினைத் தீர்வுக்கு அரசாங்கம் அணுகிய முறைகள் பிழையான வழிகள் என்று நாடு பூராவும் கூட்டங்கள் வைத்து ஐக்கிய தேசியக்கட்சி பிரசாரங்கள் மேற்கொள்ள இருப்பதாக 'யுக்திய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

கிழக்கில் மீண்டும் புலிகள் மேலாதிக்கம் பெற்றுள்ளார்கள். படையினர் போர் புரியும் உற்சாகம் குறைந்துள்ளார்கள். இவைகள் எல்லாம் அரசாங்கத்தின் அணுகுமுறையால் ஏற்பட்ட விளைவுகள் என்ற பிரசாரத்தை முன் வைக்க இருக்கிறார்கள் என 'யுக்திய' மேலும் தெரிவித்துள்ளது. 102-ரி

## ஆனையிறவு முகாமிலிருந்து ஷெல் தாக்குதல்

]தாளையடி)

ஆனையிறவு, வெற்றிலைக்கேணி இராணுவமுகாம்களில் இருந்து நேற்று முன்தினம் இரவும் நேற்று முழுவதும் குடிமனைகளை நோக்கி ஷெல் வீச்சு இடம்பெற்றது. ராணுவ முகாம்களிலிருந்த ஏவப்பட்ட ஷெல்குடிமனைகள் அற்ற வீரக்களி ஆற்றுப்பகுதியில்விழுந்து பெரும் சத்தத்துடன் வெடித்தன.

ஆனையிறவு வெற்றிலைக் கேணி இராணுவ முகாமை அண்டிய இராணுவவேலிப் பகுதியில் நேற்று பகலும் தொடர்ச்சியாக துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள் கேட்ட வண்ணமிருந்தன.

நேற்று முன்தினம் கடற்படைப்பீரங்கி படகுகளின் உதவியுடன் வெற்றிலைக்கேணி இராணுவமுகாமை அண்டிய கடல் பகுதியில் கரைக்கு மிக அண்மையில்நங்கூர மிட்ட கடற்படை பாதைப்படகு வந்த ஒரு மணித்தியாலத்துக்குள் அவசரமாக திரும்பிச் சென்றதைக் காணக் கூடியதாக இருந்தது. 163.ரி

### வட கிழக்கில்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இந்த தமிழ் அரசியல் கட்சியின் பிரதிநிதிகளுடன் வேறு சில தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளும் இன்று ஜனாதிபதியை சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்துவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இனப்பிரச்சினை தீர்வுக்காக அரசு முன்வைக்க விருக்கும் தீர்வுத் திட்டத்தை அரசு உடனடியாக பொது மக்கள் முன்னிலையில் முன்வைக்க வேண்டும்.

வடக்கு கிழக்கில் ஏற்பட்டிருக்கும் போர் நிலைமை காரணமாக தமிழ் மக்கள் எதிர் நோக்கியிருக்கும் கஷ்டங்கள் குறித்தும் ஜனாதிபதியுடன் விவாதிக்கப்படும்.

கொழும்புக்கு வரும் தமிழ் மக்கள் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டு பலவித இன்னல்களுக்கு உள்ளாகி வருவது குறித்தும் ஜனாதிபதியுடன் ஆராயப்படும்.

இதேவேளையில் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் தாம் இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளப்போதில்லையென்று தெரிவித்துள்ளனர்.

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதற்கு அரசு விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் எனவும் கூட்டணியினர் தெரிவித்துள்ளனர்-

இ. தொ. காங்கிரஸ், ஈ. பி. ஆர். எல். எவ், புளொட், ஈ. பி. டி. பி. ஆகிய நான்கு தமிழ்கட்சிகளின் பிரதிநிதிகளே இன்று ஜனாதிபதியை சந்திக்கவுள்ளனர். இ ரி

### மட்டு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பையடிச்சேனை ஆகிய இரு இராணுவ முகாம்களுக்கும் 40 மீற்றர் தொலைவில் காவலுக்கு நின்ற இராணுவத்தி மீது விடுதலைப்புலிகள் திடீர் தாக்குதல் நடத்தியபோது இராணுவவீரர் ஒருவர் கொல்லப்பட்டார். ஏனையோர்காயங்களுடன் தப்பியோடிவிட்டனர்.

ரி-56 பட் மொடல் துப்பாக்கி -1, ஏ. கே.ரவைக் கூடுகள் - 4, குண்டுகள்-3, ஏ கே எல். எம். ஜி. ரம் ரவைக் கூடுகள்-4, மழைக்கவசம் - 1, நடுத்தர ரவைகள் - 70, ஏ. கே. ரவைக்கூடு தாங்கி அணி - 1, ஏ. கே. எல்.எம். ஜி. தொடர்ரவைகள் - 400, பை - 1 என்பன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. (ரி)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்]

அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் ஒன்று யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் இன்று 17-ம் திகதி புதன்கிழமை காலை 10-00 மணிக்கு பிரதேச செயலர் தலைமையில் நடைபெறவுள்ளது. 162 ரி

## இறுதி வீர வணக்கமும் நினைவுக்கல் நாட்டலும்

[யாழ்ப்பாணம்]

கடந்த 10ம் திகதியன்று திருமலை மாவட்டத்தில் ஏற்பட்ட தவறுதலான வெடிவிபத்தில் வீரச்சாவைத் தழுவிகொண்ட வீரவேங்கை புகழரசன் [குகமூர்த்தி குகநேசன், படித்த மகளிர் குடியேற்றத்திட்டம், மிருசுவில்] அவர்களதும். 13ம் திகதியன்று திருமலை மாவட்டத்தில் குச்சவெளியில் சிறிலங்கா இராணுவந்துடனான நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கப்டன் வேங்கையன் [இராசையா திவாகரன், மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி] ஆகிய இரு மாவீரர்களதும் வித்துடலகள்கிடைக்கப்பெறுமையால் அவர்களது திருவுருவப்படங்கள் அவரவர் இல்லங்களிலிருந்து இன்று பி. ப. 3-00 மணியளவில் அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்துச் செல்லப்பட்டு மக்களின் இறுதி வீர வணக்கத்திற்காக மட்டுவில் அம்பாள் ச ச. நிலையத்தில் வைக்கப்பட்டு அங்கு இறுதி வீரவணக்கக் கூட்டமும் நிறைவுற மீண்டும் அணிவகுப்பு மரியாதைகளுடன் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் இரு மாவீரர்களது நினைவுக் கற்கள் நாட்டப்படும்

06ம் திகதியன்று திருமலை மாவட்டத்தின் தப்புறும்பிட்டி ஸ்ரீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவை தழுவிக்கொண்ட வீரவேங்கை சுடரோன் /கீதன் (பரமசாமு பகீரதன், நககாலேன் சண்டுக்குழி) 11ம் திகதியன்று திருமலை மாவட்டத்தின் குச்சவெளியில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வீரவேங்கை மணியரசன் [துரைராசா கிருஷ்ணரூபன், கொக்குவில் வீரவேங்கை நவநீதன் (பாலசுந்தரம் சுவர்ணதாசன், மல்லாகம்) வீரவேங்கை பகிலன் (கந்தசாமி சிவதீபன். ஏழாலை) ஆகிய நால்வரினதும் வித்துடல்கள் கிடைக்கப் பெறுமையால் அவர்களது திருவுருவப்படங்கள் அவரவர் இல்லங்களிலிருந்து இன்று முற்பகல் 10 மணிக்கு அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்து வரப்பட்டு மக்களின் இறுதி வீரவணக்கத்திற்காக வைக்கப்பட்டு இறுதி வீரவணக்கக் கூட்டமும் நிறைவுற மீண்டும் அணிவகுப்பு மரியாதைகளுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு. அங்கு இறுதி ராணுவ மரியாதைகளுடன் நான்கு மாவீரர்களுக்குமான நினைவுக் கற்கள் நாட்டப்படும்! ரி

# இனப்பிரச்சினை தீர்வு திட்டத்தை அரசு இப்போது வெளியிடாது

## பி. பி. ஸி. தகவல்

[லண்டன்]

இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்துத் திட்டம் எதையும் இப்போதைக்கு அரசு வெளியிட வாய்ப்பில்லை என்று பி பி.சி.யின் கொழும்பு முகவர் ஜோர்ஜ் ஆர்னி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: கொழும்பில் இன்று தமிழ்க் கட்சிகள் ஜனாதிபதியைச் சந்திக்கும் போது, தமிழர்கள் பெரும்பான்மையாகவுள்ள பகுதிகளில் அதிகமான அதிகாரப் பகிர்வு அளிக்கும் வகையில், புதிய அரசியல் சாசனத்துக்கான திட்டங்களைத் தரும்படி வலியுறுத்தும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

ஆனால் சிங்கள மக்களிடம் இருந்து எதிர்ப்பு வரக்கூடும் என்பதால், ஜனாதிபதி தமது திட்டங்களை இப்போதைக்கு வெளியிடாமல் இருக்கக்கூடும் என்று அரசுக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாதுகாப்புப் படைகளால் தமிழ் மக்கள் தொல்லைப்படுத்தப்படுவது குறித்துத் தமிழ்க் கட்சிகள் தமது கவலைகளைத் தெரிவிக்கக்கூடும் என்றும் அறியவருகிறது.

சமாதானப் பேச்சுக்கள் முறிந்துபோன நிலையில் நாடு முழுவதும் நகரங்களிலும் மற்றும் இடங்களிலும் படையினர் புகுந்து சோதனை நடத்தி வருகின்றனர்.

பல சமயங்களில் படையினர் கிழக்கே சூறையாடியிருக்கிறார்கள். கடந்த நான்கு வாரங்களில் கொல்லப்பட்ட போராளிகளின் எண்ணிக்கையை அதிகமாகக் காட்ட சிறப்பு பத்திரிகை குறிப்பு ஒன்று 151 புலிகள் கொல்லப்பட்டனர் என்றும் 250 புலிகள் காயமடைந்தனர் என்றும் கூறுகிறது. ஆனால் சிங்கள மக்கள் மற்றும் இராணுவத்தினர் மன உற்சாகங்களை பாதுகாப்பு அமைச்சகம் இப்படி மிகைப்படுத்தி காட்டுகிறது என்று பாதுகாப்பு ஆய்வாளர்களும் மேல்நாட்டு ராஜதந்திரிகளும் கருதுகிறார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (ரி)

### ஆனையிறவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

2 ரகத் துப்பாக்கி-1, ரி 56 1 ரகத் துப்பாக்கி-1, நடுத்தர ரவைகள்-1100, ஏ.கே. எல்.எம்.ஜி. தொடர் ரவைகள்-476, சைக்கிள்-5, ரவைத் தடுப்புக் கவச அணி-1, இராணுவ இடுப்புப் பட்டி-1, தண்ணீர்க் கான்-4, ஏ கே. ரவைக் கூடுகள்-5, றம் ரவைக் கூடுகள்-5, மழைக் கவசங்கள்-4, இராணுவச் சப்பாத்து ஒரு சோடி, வானொலிப் பெட்டி-1 என்பன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதலில் லெப். சேதுநாதன் அல்லது நிரஞ்சன் (தங்கவேல் மகளீஸ்வரன்-மட்டுநகர்] என்ற போராளி வீரச் சாவு அடைந்தார்.

இவருக்குப் விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். ரி

## ஐ. நா. செயலாளர் நாயகம் பதவி இலங்கையருக்கு கிடைக்கும்?

[கொழும்பு[

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகமாக தெரிவு செய்யப்படுவதற்கு இலங்கையர் ஒருவர் தகுதி பெற்றுள்ளார் என அமெரிக்காவிலிருந்து வெளிவரும் நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஐ. நாவுக்கான இலங்கையின தூதுவராவ ஜயந்த தனபால என்பவருக்கே இந்தத் தகுதி கிடைத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ. நா. சபையின் 50 வருடகால சரித்திரத்தில் ஐரோப்பா, லத்தீன் அமெரிக்கா பர்மா, மத்தியகிழக்கு ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஐ நா. வின் செயலாளர் நாயகம் பதவியை வகித்துள்ளனர்.

இலங்கையைச் சேர்ந்த திரு. தனபால ஐ நா. சபையின் செயலாளர் நாயகமாக நியமிக்கப்படும்பட்சத்தில் தெற்காசியாவில் முதன் முதலாக இந்தப் பதவியை வகித்தவர் என்ற பெருமை அவருக்கும் இலங்கைக்கும் கிடைக்கும்' இ

### நீண்ட

[1ம் பக்கத்தொடர்ச்சி]

மேலும் தெரிவித்துள்ளது.

மூன்றும் ஈழப்போர் ஆரம்பமானதைத் தொடர்ந்து விடுதலைப்புலிகளின் தாக்குதல்களும் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இத்தாககுதல்களினால் படையினருக்கு பலத்த உயிரிழப்பு ஏற்படுவதுடன் பெரும் பின்னடைவும் ஏற்பட்டுவருகிறது.

இதனால் படையினர் உற்சாகத்தை இழந்து வருவதுடன் அவர்களின் மனநிலையும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

எனவே நீண்டகால 'யுத்தம் ஒன்றுக்கு படையினரை தயார் படுத்தும் சகல நடவடிக்கைகளையும் அரசு தற்போதுமேற்கொண்டுவருகிறது

படைக்கு ஆட்திரட்டல், நவீனரக ஆயுதக் கொள்வனவு உட்பட படைகளுக்கு தேவையான பல நடவடிக்கைகளை அரசு தீவிரமாகமேற்கொண்டு வருகிறது.

நீண்டகல யுத்தத்திற்கு தேவையான நிபுணத்துவ ஆலோசனைகள் பல இராணுவ அதிகாரிகள் வழங்கியுள்ளனராம். ரி

## மட்டக்கவப்பில் இருவர் சுட்டுக் கொலை

(லண்டன்)

மட்டற்களப்பில் நேற்று இரு அடபாவித் ஜமிழ் இளைஞர்கள் சிறிலங்கா படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என பி. பி. சி. நேற்று தெரிவித்தது.

மட்டக்களப்பிலிருந்து 15 மைல் வடக்கே காலைக் கடன்களை முடித்துக்கொண்டிருந்தபோதே இந்த இரு இளைஞர்களும் சுட்டுக் கொல்லப்பட்டதாக மேலும் தெரிவிக்க பட்டது. ரி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு மே மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Neaws paper at the General Post office Sri Lanka under Licence number B/1633613.